**24.06.2024**

**அ.வ.எண். 202/2012**

**<u>வா.சா.1 கஸ்தூரி அவர்களின் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. என்னிடம் காட்டபடும் ஆவணம் எனது கணவர் எனக்கு03.02.2006 அன்று சர்வே எண் 83/1எ ல் 85 செண்ட் நிலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்த ஆவணம் என்றால் சரிதான். (அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) பி.சா.ஆ.1ல் பழைய சர்வே எண் 83/1 மற்றும் சர்வே எண் 83/1எ 85 செண்ட் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 83/1ல் மிகுதி நிலம் என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 முன்னிலையில் எனது கணவர் சர்வே எண் 83/1எ ல் எனக்கு எழுதிகொடுத்த 85 செண்ட் நிலத்தினை நான் குணசேகரன் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான்.

2. பி.சா.ஆ.1க்கு முன்பு 27.02.1991 அன்று எனது கணவர் தனது சொத்துகளை சென்டிவாக்கம் கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் ஆவணம் அந்த அடமானபத்திரம் என்றால் சரிதான். (அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). பி.சா.ஆ.2ல் சர்வே எண் 83/1எ கண்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்திற்கு மேற்கு பக்கம் தாவா சொத்து என்றால் சரிதான். எனக்கு செட்டில்மெண்ட்

எழுதி வைத்த சர்வே எண் 83/1எ வினை எனது கணவர் பி.சா.ஆ.2 முன்னிலைக்கு அடமானம் வைத்தார் என்றால் சரிதான். சர்வே எண் 83/1எ வின் ஜக்குபந்தி பி.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. சர்வே எண் 83/1எ விற்கு மேற்கு பக்கம் தன்னுடைய மிகுதி நிலம் என்று எனது கணவர் பி.சா.ஆ.2ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா கிராமத்தில் எனது கணவருக்கு சொந்தமான அனைத்து சொத்துகளையும் எனது கணவர் பி.சா.ஆ.1 முன்னிலைக்கு எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டார் என்றால் சென்டிவாக்கத்தில் உள்ள அனைத்து சொத்துகளையும் எனக்கு எழுதி கொடுத்துவிட்டார். தாவா சொத்து எனது கணவருக்கு உரிமையில்லாத சொத்து என்பதால்தான் அதனை பி.சா.ஆ.1 முன்னிலைக்கு எனக்கு செட்டில்மெணண்ட எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. அதை எனது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார்.

4. சர்வே எண் 83/1எ மற்றும் சர்வே எண் 83/1பி என்று எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உட்பிரிவு தவறானது என்று எனது கணவர் ஏதேனும் ஆட்சேபணை தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். எப்போது என்று எனக்கு தெரியாது. அந்த ஆட்சேபணை மீது ஏதேனும் உத்தரவு பிறப்பித்தார்களா என்றால் இல்லை. தற்போது வரை நிலுவையில் உள்ளது. மேற்படி உட்பிரிவுகளை ஏற்றுகொண்டுதான் எனது கணவர் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 னை எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவுகள் தவறானது

என்றும் அதற்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளேன் என்றும் எனது பிராதுவிலும் பிரமாணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை. 'யூடிஆர்' திட்டத்தில் சர்வே எண் 83/1எ விற்கு எனது கணவர் பெயரில் வழங்கிய பட்டா எண் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு கிருஷ்ணா ரெட்டியார், சுந்தரவதனரெட்டியார் மற்றும் வெங்கடராமரெட்டியார் ஆகியோர் பெயரில் வழங்கிய பட்டா எண் 166 என்றால் எனக்கு தெரியாது.

5. எனது கணவர் கொடுத்த ஆட்சேபணையின் நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனது கணவருக்குதான் தெரியும். என் கணவர்தான் எனக்கு பின்னாலிருந்து இந்த வழக்கை நடத்துகிறார். வா.சா.ஆ.10 முதல் 14 வரை உள்ள ஆவணங்கள் தற்காலிக நடவடிக்கை ஆவணங்கள் என்றாலும் அதனை உறுதி செய்து இறுதி உத்தரவு எதுவும் பிறப்பிக்கபடவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு எந்த காலத்திலும் எனது கணவர் பெயரில் பட்டா இருந்தது இல்லை என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ.9ல் பட்டா எண் 7 என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் எனக்கு தெரியாது. 1984ம் வருடம் 'யூடிஆர்' திட்டத்தின்கீழ் உட்பிரிவு செய்யப்பட்ட உட்பிரிவினை எதிர்த்து காலம் தாழ்த்தி 2012ம் வருடம் இந்த வழக்கை தாக்கல் செய்ததால் இந்த வழக்கு கால வரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.9ல் கண்டுள்ள சொத்துகளுக்கு எனது மகன் தனது பெயரில் பட்டா மாற்றிக்கொண்டாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.9ன்

தேதியிலிருந்து தற்போது வரை நான் முகவர் என்ற முறையில் அந்த சொத்துகளுக்கு வரி செலுத்தினேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.9 காலத்திலிருந்து வா.சா.ஆ.1 காலம் வரை எனது மகன் அந்த சொத்துகளுக்கு வரி செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. எந்த காலத்திலாவது எனது கணவர் சர்வே எண் 83/1பி க்கு வரி செலுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது.

7. என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். யூடிஆர் திட்டம் காலத்திலிருந்து தாவா சொத்தின் அனுபவம் பிரதிவாதிகளிடம் உள்ளது. யூடிஆர் திட்டத்தில் தாவா சொத்தின் பட்டா பிரதிவாதிகள் பெயரில் மாற்றப்பட்டது என்று எனது கணவருக்கு 2010 அல்லது 2011ம் வருடம் தெரியவந்தது. சர்வே எண் 83/1எ எல்லா காலத்திலும் எங்கள் அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். யூடிஆர் திட்டத்தின் கீழ் தாவா சொத்தின் அனுபவம் பிரதிவாதிகளிடம் இருந்ததற்கு நாங்கள் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் அந்த விவரம் தெரியவந்தபிறகு ஆட்சேபணை செய்தோம். பிரதிவாதிகளுக்கு இடைஞ்சல் செய்யவேண்டும் என்பதற்காக எனது கணவர் பொய்யாக எனது பெயரில் செட்டிமெண்ட் ஆவணம் எழுதிவைத்து என்னை முகவராக நியமித்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 11ம், 12ம் மற்றும் 14ம் பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்வதாக 11ம், 12ம் மற்றும் 14ம்

பிரதிவாதிகள் வழக்கறிஞர் தெரிவித்தார்)